ஆண்டு பட்டிகை வழக்கு எண்.165/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

C.C.No. 165/2025 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : கிருபாகரன் ( புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : சீனிவாசன் |
| Village | : நத்தம் காவல் நிலையம் (தலைமைக் காவலர்) |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026

(எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தற்போது நத்தம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி நாகராஜன் என்பவரை தெரியும். கடந்த 10.04.2025ம் தேதி 12.30 மணிக்கு நானும், என்னுடன் பணிபுரிந்த முதல்நிலை காவலர் 827 அமல்ராஜ் என்பவரும் ரோந்து பணி சம்பந்தமாக நத்தம், அண்ணாநகர், காமராஜ் நகர், செந்துறை ஆகிய பகுதிகளில் ரோந்து செய்து வரும்போது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் செந்துறை பிரிவு, குப்பைமேடு அருகே சென்றபோது, எங்களை பார்த்ததும் ஓட முயன்றவரை பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் நாகராஜன், வயது 46, த/பெ.வீரமணி, பாரதிபுரம், அடியனூத்து, திண்டுக்கல் மாவட்டம் என்று விலாசம் சொன்னவரை மேலும் விசாரிக்க அரசின் எவ்வித அனுமதியும் இன்றி 180 ML அளவுள்ள Vorion என்ற 23 பிராந்தி பாட்டில்களையும், 180 ML அளவுள்ள Black Pearl என்ற 26 பிராந்தி

பாட்டில்களையும் சில்லறை விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறினார். அதனால் அவரை மதுபான பாட்டில்களுடன் 14.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளர் திரு.தர்மர் அவர்களிடம் தனி அறிக்கை கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தனி அறிக்கையை நான் தயார் செய்தேன். அதில் முதல் நிலைக் காவலர் அமல்ராஜ் என்பவர் கையொப்பம் செய்துள்ளார். (**அந்த தனி அறிக்கை அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி வழக்கு சொத்துக்களை சார்பு ஆய்வாளர் நானும், முதல்நிலை காவலர் 827 அமல்ராஜ் என்பவரும் சாட்சிகளாக இருக்க எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியபோது, நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2) கைப்பற்றப்பட்ட மதுபானங்களை எதிரி எங்கிருந்து வாங்கினார், யார் வசம் வாங்கினார், யாருக்கு விற்பனை செய்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். எத்தனை பாட்டில்கள் வாங்கினார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். எவ்வளவு லாபத்திற்கு விற்பனை செய்தார் என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். செந்துறை ரோட்டில் வலதுபுறம் உள்ள குப்பைக் கிடங்கிற்கு ஒட்டி மண் ரோடு செல்கிறது என்றால் சரிதான். அதற்கு அருகே சிறுமலை ரோஜா ரீ கிரியேசன் கிளப் உள்ளது என்றால் சரிதான். அந்த கிளப்பில் FL2 அனுமதி பெற்று மதுபானங்களை விற்பனை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மதுபானம் வாங்க வேண்டும் என்றால் மேற்படி கிளப்பில் சென்று வாங்கிக் கொள்ளலாம் என்றாலும், தனியாக குப்பைக் கிடங்கிற்கு அருகே வாங்க

வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், வாங்குபவரின் மனநிலையை பொறுத்தது.

3) இந்த வழக்கில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் குப்பைக் கிடங்கிற்கு அருகே என்று சொல்லும் நிலையில் அது சுமார் 10 ஏக்கருக்கு மேல் இருப்பதால் இடத்தை குறிப்பிட்டு சொல்லாதது தவறானது என்றால் சரியாக தெரியவில்லை. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன தேதியில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. தனி அறிக்கை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.24 13:04:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்